**தலைப்பு 13 – இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியற்ற அபிப்பிராயம்**

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 27 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஆணைக்குழுவின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்வதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

  எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ)பிரிவின் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் முன்னைய ஆண்டிற்கு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமைால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது

(ஆ) இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | பிரமான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) இலங்கை சாநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| நிதிப் பிரமாணம் 115 | 2017 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட கட்டிட திருத்தங்களுக்கான 2018 ஆம் ஆண்டின் போது 1,955,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அதற்காக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில் லை | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2017 திசெம்பர் 31 ஆந் திகதி முதலாவது கிடைத்த மாதிரிப்பட்டியல் விபரமானதாக இல்லாமையால் விரிவான பட்டியலொன்று பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் அதில் திகதியாக 2018 பெப்ரவரி 27 ஆந் திகதி குறிப்பிடப்பட்டிருந்தது. அத்திகதி 2018 ஆம் ஆண்டிற்குறியதாக இருப்பதால் தி.பி. 115 இன் பிரகாரம் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) பொது நிர்வாகச் சுற்றிக்கை | | | |

| | | | |
|---|---|---|---|
| 2006 ஏப்ரல் 25 ஆந் திகதி 06/2006 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3 மற்றும் 4 ஆம் பந்திகள் | சுற்றறிக்கையின் பிரகாரம் பதவியணியின் சம்பள பரிமாற்றம் செய்யப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் பதவியணியின் சம்பள பரிமாற்றம் செய்யப்பட வேண்டும். | தேசிய சம்பள ஆணைக் குழுவிடமிருந்து ஆலோசனை கோரப்பட்டுள்ளது. ஆலோசனை பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் எதிர்வரும் நடவடிக்கை எடுக்கப்படும் |

**2.2 செலவின முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 02 செலவின விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 450,000 ஆன நிதிஏற்பாடு எவ்வித பயன்பாடொன்றில்லாமல் முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது. களில் செலவிடப்பட்டதன் பின்னர் சேமிப்புக்கள் ஒதுக்கீடுகளில் 19 சதவீதம் முதல் 87 சதவீதம் வரையான அளவினைக் கொண்டிருந்தது. மிகைத்து பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் நிறைவேற்றப்படும் வகையில் வருடாந்த செலவின மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | அவதானிப்புடன் இணங்குகின்றேன் |
| (ஆ) | 07 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக ரூபா 36.60 ஆன மிகை நிதி மேற்கொள்ளப்பட்டதால் அச்செலவின விடயங்களில் நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டதன் பின்னர் சேமிப்புக்கள் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிஏற்பாடுகளில் 12 சதவீதம் முதல் 35 சதவீதம் வரையான அளவினைக் கொண்டிருந்தது. | - மேற்படி - | அவதானிப்புடன் இணங்குகின்றேன் |
| (இ) | 05 மூலதன செலவின விடயங்களுக்காக ரூபா 3.51 ஆன மிகை நிதி மேற்கொள்ளப்பட்டதால் அச்செலவின விடயங்களில் பயன்படுத்தப்பட்டதன் பின்னர் சேமிப்புக்கள் | - மேற்படி - | அவதானிப்புடன் இணங்குகின்றேன் |

ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிஏற்பாடுகளில் 12 சதவீதம் முதல் 36 சதவீதம் வரையான அளவினைக் கொண்டிருந்தது.

**2.3 வங்கிக் கணக்குகளை செயற்படுத்தல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கிற்கு மேலதிகமாக மேலும் 04 கணக்குகளில் ரூபா 771,072 ஆன மீதிகள் காணப்பட்டதுடன் 2007 செப்தம்பர் 05 ஆந் திகதிய 5/2007 ஆம் இலக்க திறைசேறி செயற்பாட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அக் கணக்குகளை மூடிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | திறைசேறி செயற்பாட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அவதானிப்புடன் இணங்குகின்றேன். |

**2.34 செயல்நிமித்த கட்டுநிதி வழங்கலும் தீர்ப்பனவும்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) நிதிப்பிரமாணம் 371(2)(ஆ) பிரமாணத்திற்கு முரணாக 03 சந்தர்ப்பங்களில் மூன்று உத்தியோகத்தர் களுக்கு ரூபா 100,000 இனை மிகைத்து செயல்நிமித்த கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 371 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ரூபா 192,000 ஆன முற்பணம் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்திற்கு கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) நிதிப்பிரமாணம் 371(5) இன் பிரகாரம் வழங்கப்பட்ட செயல் நிமித்த கட்டுநிதி செயற்பாடு முடிவடைந்து 10 நாட்களுக்குள் தீர்வுசெய்யப்பட வேண்டிய | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சமர்பிக்கப்பட்டுள்ள விடயங்களை ஏற்றுக் கொள்வதுடன் எதிர்காலத்தில் அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். |

போதிலும் 06 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 184,000 கூட்டுத் தொகையான செயல் நிமித்த கட்டுநிதி 14 நாட்கள் முதல் 63 நாள் காலதாமதத்தின் பின்னர் தீர்வுசெய்யப்பட்டிருந்தது,

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 திட்டமிடல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 2014/01 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டிற்காக ஆணைக்குழுவினால் செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விசாரணையிலுள்ள விடயங்களை ஏற்றுக் கொள்வதுடன் தற்போது 2018 ஆம் ஆண்டிற்காக செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு வருகின்றது. |
| (ஆ) ஆணைக்குழுவின் 04 கிளை அலுவலகங்களினால் 2018 சனவரி மாதம் முதல் யூன் மாதம் வரையான காலப்பகுதிக்குரிய மாதாந்த வேலைத் திட்ட அறிக்கை (Work Plane) மற்றும் திட்டமிடப்பட்ட செயற்பாடுகளில் செயன் முன்னேற்ற அறிக்கை தலைமை அலுவலகத்திற்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 05 கிளை அலுவலகங்களினால் பல மாதங்களுக்குரிய அத்திட்டம் மற்றும் அறிக்கைகள் தலைமை அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | வேலைத் திட்ட அறிக்கை (Work Plane) மற்றும் திட்டமிடப்பட்ட செயற்பாடுகளின் செயன் முன்னேற்ற அறிக்கை மாதாந்தம் தலைமை அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | 2018 சனவரி மாதம் முதல் யூன் மாதம் வரையான காலப்பகுதிக்குரிய மாதாந்த வேலைத் திட்ட அறிக்கைகளை சமர்ப்பிக்குமாறு உரிய பிராந்திய அலுவலகங்களிற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. |

**3.2 செயற்பாடுகளை நிறைவேற்றாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| முதலாவது அரையாண்டில் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்தினால் முறைப்பாடுகள் மற்றும் புலனாய்வுப் பிரிவினால் ( I & I Division) 72 பொலிஸ் புலனாய்வு அறிக்கைகளும் 10 தடுத்து வைத்தல் நிலைய புலனாய்வு அறிக்கைகளையும் (Detention Centers Visit) புலனாய்வு செய்வதற்கு திட்டமிடப்பட்ட போதிலும் 2018 யூன் 30 ஆந் திகதி வரை 44 பொலிஸ் நிலைய புலனாய்வு அறிக்கைகளும் 11 தடுத்து வைத்தல் புலனாய்வு அறிக்கைகளும் புலனாய்வு செய்யப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் திட்டமிடப்பட்ட 28 பொலிஸ் நிலைய புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | திட்டமிடப்பட்டதன் பிரகாரம் புலனாய்வு அறிக்கைகள் ஒப்பீடு செய்து சமர்ப்பிக்கப்பட வேண்டும் | உத்தததீயோகத்தர்களுக்காக பயிற்சிசெயலமர்வுகள் நடாத்துதல் மற்றும் உத்தியோகத்தர்கள் போதியளவில் இல்லாமை மற்றும் பலசெயற்பாடுகள் காரணமாக மேற்கொள்ள முடியவில்லை |

**3.3 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பெறுகை திட்டத்தின் பிரகாரம் 04 வகை பொருட்களை கொள்வனவு செய்வதற்கு உரிய பெறுகை செயற்பாடுகள் 2018 ஆகஸ்ட் 01 ஆந் திகதிக்கு முன்னர் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் அச்செயற்பாடுகள் எதுவும் 2018 ஆகஸ்ட் 24 ஆந் திகதிவரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகை திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பெறுகை திட்டம் அங்கீகரிப்பதற்கு தாமதமாக இருப்பதால் பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுவதில் தாமதமாகியது |

**3.4 செயலாற்றல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) வருடாந்த செயலாற்றல் அறிக்கையில் பிராந்திய அலுவலகங்களுக்கு கிடைத்திருந்த 3173 முறைபாடுகளின் | வருடாந்த செயலாற்றல் அறிக்கையில் | பிராந்திய அலுவலகங்களில் பூர்த்தி செய்த முறைப்பாடுகளின் தரவு கிடைத்திருக்கவில்லை |

| | | | |
|---|---|---|---|
| | செயன்முன்னேற்றம் தொடர்பாக எவ்வித தகவலும் வருடாந்த செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. 2018 ஆம் ஆண்டின் போது தலைமை அலுவலகத்தினால் விசாரிக்கக் கூடியதாக இருந்த 1493 முறைப்பாடுகளில் 226 முறைப்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு பூர்த்தி செய்யப்பட்ட 226 முறைப்பாடுகளில் 37 முறைப்பாடுகளுக்கு மாத்திரம் பரிந்துரை வழங்கப்பட்டிருந்தமை இணக்கப்பாட்டிற்கு வருதல் மற்றும் சலுகைகள் வழங்கப்பட்டிருந்தன. | பிராந்திய அலுவலகங்களுக்கு கிடைத்த முறைப்பாடுகளின் செயன் முன்னேற்றமும் குறிப்பிடப்பட வேண்டும். | |
| (ஆ) | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 6465 முறைப்பாடுகள் எஞ்சியிருந்தன. 2018 ஆம் ஆண்டின் போது நிறைவு செய்யப்பட்டதாக செயலாற்றல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. அவ்வாறு 2656 முறைப்பாடுகளில் 415 முறைப்பாடுகளுக்கு மாத்திரம் பரிந்துரை வழங்கப்பட்டிருந்தமை இணக்கப்பாட்டிற்கு வருதல் மற்றும் சலுகைகள் கட்டளை வழங்கல் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | முறைப்பாடுகளில் போதியளவு காலப்பகுதியில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பூர்த்தி செய்யப்பட்ட 415 முறைப்பாடுகளுக்கு மேலதிகமாக அடிப்படை உரிமை கண்டறியப்படாமை, முறைப்பாட்டுத் தரப்பினர் அக்கரை செலுத்தாமை, வாபஸ் வாங்குதல், ஏனைய நிறுவனங்களுக்கு தொடர்புபடுத்துதல், நீதி மன்ற செயற்பாடொன்று காணப்படல், ஆணைக்குழுவின் விடயப்பரப்பிற்கு உட்பட்டதல்ல என பின்னர் கண்டறியப்பட்டமை மற்றும் காலாவதியாதல் போன்ற காரணங்களினாலும் 2241 முறைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |

### 3.5 பெறுகைகள்

--------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிழற்பட பிரதி இயந்திரமொன்று கொள்வனவு செய்வதற்காக கேள்வி கோரும் சந்தர்ப்பம் வரை பெறுகை குழுவொன்றும் தொழில் நுட்ப மதிப்பீட்டுக் குழுவொன்றும் நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை. கேள்வி திறந்தன் பின்னர் தொழில்நுட்ப மதிப்பாய்வுக்கு குழு மாத்திரம் நியமிக்கப்பட்டிருந்தது. | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.4.1 வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்வரும் பெறுகை செயற்பாட்டின் போது பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | நிழற்பட பிரதி | அரசின் பெறுகை | எதிர்காலத்தில் |

| | | |
|---|---|---|
| இயந்திரமொன்று கொள்வனவின் கேள்வி திறத்தல் தொடர்பாக கூறுவிலை திறக்கும் குழு அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வழிகாட்டல் கோவையின் 6.3.6 வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | குறித்துரைக்கப்பட்ட மாதிரிப் படிவத்தின் பிரகாரம் அறிக்கை வைப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

## 4 நல்லாளுகை

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உள்ளகக் கணக்காய்வு பதவி வெற்றிடமாக இருந்த போதிலும் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அவ் வெற்றிடத்தை நிரப்புவதற்கு ஆணைக்குழு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வாளர் நியமிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அப் பதவியை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |